பக்கங்கள் - 12
விலை - ரூபா 50

**ஜூன் மாதத்தில் மின்கட்டணத் திருத்தம்** » 02

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 97

திங்கட்கிழமை
03 மார்ச் 2025

மாசி 19 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

### ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின்

# இலங்கை தொடர்பான அறிக்கை ஜெனிவாவில் இன்று சமர்ப்பிப்பு!

**ஜெனிவா, மார்ச் 3**

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 58ஆவது அமர்வு ஜெனிவாவில் நடைபெற்றுவரும் நிலையில், இலங்கை தொடர்பான வாய்மூல அறிக்கையை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் இன்று சமர்ப்பிக்கவுள்ளார். பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் போன்றவற்றில் இலங்கையில் உள்ள நிலைமை தொடர்பாக அவர் தனது வாய்மூல அறிக்கையில் சுட்டிக்காட்டவுள்ளார்.** 11



## போதைமாத்திரைகளுடன் சுதுமலையில் இருவர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 3
ஆயிரத்து 600 போதை மாத்திரைகளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் சுதுமலையில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.
மானிப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய சுதுமலையில் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டபோது, மோட்டார்சைக்கிளில் பயணித்த இருவர் சோதனைக்குட்படுத் 11

## 125 கிலோ கஞ்சாவுடன் மாதகலில் இருவர் கைது

### வவுனியாவில் இருந்து வந்த எஸ்.ரி.எவ். அதிரடி நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 3
மாதகலில் 125 கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளதுடன், கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று இளவாலைப் பொலிஸார் தெரிவித்தனர்.
வவுனியாவில் இருந்து வந்த விசேட அதிரடிப் படையினரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. 11

## செம்மணிப் புதைகுழியில் சாட்சியம் அழிக்கப்படலாம்

### நாடாளுமன்றில் கஜேந்திரகுமார் சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், மார்ச் 3
செம்மணிப் புதைகுழியுடன் தொடர்புடைய மனித எலும்பு எச்சங்களே அண்மையில் செம்மணியில் மீட்கப்பட்ட மனித எலும்பு எச்சங்களோ என்ற சந்தேகம் உள்ளது. அந்தப் பகுதிக்குப் பாதுகாப்பு வழங்கப்படாவிட்டால் சாட்சியங்கள் அழிக்கப் 11



## வல்வைப் படுகொலைகளின் வாக்குமூலங்கள் நேற்று வெளியீடு!

யாழ்ப்பாணம், மார்ச் 3
'வல்வெட்டித்துறை : ஒரு படுகொலையின் வாக்குமூலங்கள்' என்ற அறிக்கை வெளியீடு நேற்று வடமராட்சியில் நடைபெற்றது.
சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான 11

## ஜப்பான் செல்கிறார் ஜனாதிபதி அநுர!

கொழும்பு, மார்ச் 3
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஜப்பானுக்கு நான்குநாள் உத்தியோகபூர்வ பயணம் ஒன்றை மேற்கொள்ள 11

## மணல் கடத்திய டிப்பரை சுட்டுப்பிடித்தது பொலிஸ்

### ஒருவருக்குக் காயம்



யாழ்ப்பாணம், மார்ச் 3
பருத்தித்துறையில் சட்டவிரோதமாக மணல் ஏற்றியபடி, உத்தரவுக்குக் கட்டுப்படாமல் பயணித்த டிப்பரை பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தி மடக்கிப்பிடித்தனர்.
பருத்தித்துறை பொன்னாலை வீதியில் நேற்றுக் காலை மணல் ஏற்றிச்சென்ற டிப்பரைப் 11

## எரிபொருள் விநியோகம் தடையின்றித் தொடரும்!

யாழ்ப்பாணம், மார்ச் 3
யாழ்ப்பாணத்தில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது என்றும், போதிய எரிபொருள் இருப்புகள் உள்ளன என்றும் எரிபொருள் நிரப்புநிலையத் தகவல்கள் தெரி 09

## எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு வாய்ப்புகள் ஏதும் இல்லை!

### பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 3
நாட்டில் மூன்று வாரங்களுக்குப் போதுமான எரிபொருள் இருப்பு உள்ளது என்று இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் டி.ஜே.ராஜகருணா தெரி 11




'நடக்கிறதையெல்லாம் பாக்க இனிமேல் 'ரிக்றொக்' எண்டாலே பக்பக் எண்டு பயம் வரப்போகுது கண்டியளோ'

# வெளிநாட்டு ஆசையிலிருப்போரை "ரிக்ரொக்கில்" வலைவீசி மோசடி!

### ஆரியகுளம் கடத்தல் சம்பவத்தில் இருவர் கைது
### விசாரணையில் வெளியான திடுக்கிட வைக்கும் திட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 3
யாழ்ப்பாணம் நகரப்பகுதியில் வைத்து இளைஞர் ஒருவரைக் கடத்திச்சென்று 80 இலட்சம் ரூபா பணம் கொள்ளையிடப்பட்ட சம்பவத் 11

மக்கள் [illegible] தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03.03.2025 திங்கட்கிழமை

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 02.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4005 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கங்கள் | 07 50 66 76 |
| விசேட எழுத்து | K |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 02.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1072 |
| வெற்றி இலக்கினம் | மீனம் |
| வெற்றி இலக்கங்கள் | 17 26 30 45 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 02.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 031 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கங்கள் | 5 7 2 5 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 02.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2111 |
| ஆங்கில எழுத்து | V |
| சுப்பர் இலக்கம் | 14 |
| வெற்றி இலக்கங்கள் | 07 27 61 71 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 02.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5763 |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கங்கள் | 7 0 8 5 6 6 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 02.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1793 |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கங்கள் | 34 38 49 67 |
| விசேட எழுத்து | O |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 02.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 338 |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கங்கள் | 8 5 6 6 |



# அரசியல் 'டீல்'களால் ஊழல்கள் மூடிமறைப்பு

## மீளக்கையிலெடுத்துள்ளோமென அமைச்சர் ஆனந்தவிஜயபால தெரிவிப்பு

கொழும்பு, மார்ச்.3

**நல்லாட்சிக்காலத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அரசியல் 'டீல்' களால் நிறுத்திவைத்த ஊழல் முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளை நாங்கள் மீள விசாரணைக்கு எடுத்துள்ளோம் எனப் பொதுப்பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார்.**

நல்லாட்சிக்காலத்தில் நான்தான் இலஞ்ச ஒழிப்புப்பிரிவு பணிப்பாளராக இருந்தேன். இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு மற்றும் பல திணைக்களங்கள் தொடர்பாக 1200 முறைப்பாடுகள் கிடைத்தன. இவற்றில் ஐந்நூறுக்கு மேற்பட்ட முறைப்பாடுகளை விசாரிக்கவிடாமல் மைத்திரியும், ரணிலும் தடுத்துவிட்டனர். அரசியல் டீல்களுக்காகவே இந்த விசாரணைகள் நிறுத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-41-6)

# மோடி - ரணில் இந்தியாவில் சந்திப்பு

புதுடில்லி, மார்ச்.3

டெல்லிக்கு விஜயம் செய்துள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் சனிக்கிழமை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

'உலகளாவிய விசேட முன்னேற்றங்கள்' குறித்த மாநாட்டில் கலந்துகொள்வதற்காக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வியாழக்கிழமை இந்தியா சென்றார்.

இதன்போது தெற்காசிய புவிசார் அரசியல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிறப்புரையாற்றினார். இதன்போதே இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியையும் சந்தித்துக் கலந்துரையாடினார். (ச-இ)

# அரச வாகனங்கள் ஏலத்தில் விற்பனை

யாழ்ப்பாணம், மார்ச்.3

ஜனாதிபதி அலுவலகத்துக்குச் சொந்தமான 14 சொகுசு வாகனங்கள் மற்றும் பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்ட 6 வாகனங்கள், வாகன உதிரிப்பாகங்கள் என்பன ஏலத்தில் கடந்த வெள்ளிக்கிழமை விற்பனை செய்யப்பட்டன.

அரசாங்கத்தின் செலவுகளைக் குறைத்தல் மற்றும் நிதி பொறுப்புகளை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டு இவ்வாறு ஜனாதிபதி அலுவலகத்துக்குச் சொந்தமான வாகனங்களை விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி 9 டிபெண்டர் ரக ஜீப்கள், வொல்வோ ரக ஜீப் ஒன்று, க்ரயிஸ்லர் ரக வாகனம் ஒன்று, மஹேந்திரா பொலெரோ வாகனம் ஒன்று, ரோஸா பஸ் ஒன்று, டிஸ்கவரி வாகனம் மற்றும் டொயாடோ மோட்டார் வாகனம் உள்ளடங்களாக 15 வாகனங்கள் ஏலமிடப்பட்டிருந்தன. (ச-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 02.03.2025 | ஞாயிற்றுக்கிழமை | 0471 |
| DLB ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| E | 1 1 8 1 1 5 | |

| Super Ball DLB | திகதி | தினம் |
|---|---|---|
| | 02.03.2025 | ஞாயிற்றுக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2737 | U | 26 27 35 60 |

| சனிதா DLB | திகதி | தினம் |
|---|---|---|
| | 02.03.2025 | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| A | 02 63 66 70 | 4898 |

| SASIRI DLB | திகதி | தினம் |
|---|---|---|
| | 02.03.2025 | ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் | |
| 0634 | 28 33 40 | |

| லக்ன ராசி | திகதி | தினம் |
|---|---|---|
| | 02.03.2025 | ஞாயிற்றுக்கிழமை |
| கடகம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 03 04 10 56 | 4449 |

DLB

| KAPRUKA DLB | | திகதி | தினம் |
|---|---|---|---|
| | | 02.03.2025 | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| K | 14 | 19 40 45 68 | 1913 |

| அத கோடிபதி DLB | திகதி | தினம் |
|---|---|---|
| | 02.03.2025 | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| N | 01 06 55 57 | 2563 |

# இலஞ்சம் பெற்ற தபால் ஊழியருக்கு 28 ஆண்டுகள் சிறைத்தண்டனை

கொழும்பு, மார்ச்.3

இலஞ்சமாகப் பெற்ற குற்றச்சாட்டில் தபால் திணைக்களத்தின் அலுவலக உதவியாளருக்கு 28 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து கொழும்பு உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மத்திய அஞ்சல் பரிமாற்றத்தின் சர்வதேச எக்ஸ்பிரஸ் பிரிவில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட 30 சி.சி.ரி.வி. கமராக்களை வரி செலுத்தாமல் விடுவிப்பதற்காக முறைப்பாட்டாளரிடமிருந்து 11 ஆயிரம் ரூபா இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டின் கீழ் குறித்த அலுவலக உதவியாளர் மீது இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு வழக்குப் பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# ஜூன் மாதத்தில் மின்கட்டணத் திருத்தம்

கொழும்பு, மார்ச்.3

நாட்டில் நிலவும் வறட்சி நிலைமை மற்றும் எரிபொருள் அடிப்படையிலான மின்சார உற்பத்தியின் அளவைப் பொறுத்து, ஜூன் மாதம் மின்சாரக் கட்டணத்தில் திருத்தம் செய்யப்படும் என இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பரிந்துரையின் பேரில், நாட்டின் தற்போதைய விதிமுறைகளின் படி, மின்சாரக் கட்டண மாற்றங்கள் ஒவ்வொரு ஆறு மாதத்துக்கு ஒரு முறை மேற்கொள்ளப்படவுள்ளது.

அதேவேளை மின்சார உற்பத்திச் செலவுகள் அதிகரிப்புக் காரணமாகக் கட்டணம் அதிகரிக்கவாய்ப்புள்ளதாக மின்சக்தி அமைச்சர் குமார ஜெயகொடி அண்மையில் குறிப்பிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# மாயமான தேசபந்து தென்னக்கோன் முன்னாள் அமைச்சரின் பாதுகாப்பில்?

கொழும்பு, மார்ச் 3

நீதிமன்றத்தின் கைது உத்தரவை அடுத்து முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தலைமறைவாகியுள்ளார் என்று கூறப்படும் நிலையில், முன்னாள் அமைச்சர் ஒருவரின் பாதுகாப்பில் அவர் உள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

2023ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி வெலிகமவில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று தொடர்பாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், இந்த வழக்கில் தேசபந்து தென்னக்கோன் உட்பட 8 பொலிஸ் அதிகாரிகள் சந்தேகநபர்களாக அடையாளப்பட்டுள்ளனர். அவர்களைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தநிலையில் தேசபந்து தென்னக்கோன் தலைமறைவாகியுள்ளார் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் நாடாளுமன்றில் தெரிவித்திருந்தார். தேசபந்து தென்னக்கோனுக்கு வெளிநாட்டுப் பயணத் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், அவர் முன்னாள் அமைச்சர் ஒருவரின் பாதுகாப்பில் உள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆயினும் அந்தத் தகவல்களை உறுதிப்படுத்தமுடியவில்லை. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அராலி – வேலணைப் பாலத்தை சீரமைக்க முன்மொழிவைத் தருக

## சிறீதரன் எம்.பி. கோரிக்கை

**யாழ்ப்பாணம், மார்ச் 3**

**அராலியையும் வேலணையையும் இணைக்கின்ற பாலத்தையும் அதனுடன் தொடர்புடைய வீதிகளையும் சீரமைப்பதற்கான திட்ட முன்மொழிவைத் தருமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.**

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும், நிதி உறுதிப்படுத்தல் நடவடிக்கையும் சூம் தொழில்நுட்பத்தின் வாயிலாக நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்றது. இதன்போதே, அராலியையும் வேலணையையும் இணைக்கின்ற பாலத்தையும் அதனுடன் தொடர்புடைய வீதிகளையும் சீரமைப்பதற்கான முன்மொழிவை சிறீதரன் எம்.பி. கோரியுள்ளார்.

வழுக்கையாறு, புங்குடுதீவு, குறிகாட்டுவான் வீதிப்புனரமைப்பு மிகப் பிரதானமானது. அத்துடன் அராலித்துறை மற்றும் வேலணையை இணைக்கின்ற பாலத்தையும் சீரமைக்கவேண்டியுள்ளது. 2017ஆம் ஆண்டு அந்தப் பாலத்தைச் சீரமைப்பதற்காக 14 ஆயிரம் மில்லியன் ரூபா தேவைப்பட்டது. எனினும், பிற்காலத்தில் அந்த முயற்சிகள் கைவிடப்பட்டன. ஆனால், எதிர்காலத்தில் அந்தப் பாலத்தை சீரமைக்க வேண்டியது அவசியமாகும். எனவே, தற்போது அந்தப் பாலத்தை சீரமைப்பதாக இருந்தால் எவ்வளவு தொகை செலவாகும் என்ற திட்டமுன்மொழிவைத் தாருங்கள் என்றார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர், தற்காலத்தில் ஏற்பட்டுள்ள பொருட் செலவினத்தின் அடிப்படையில் சுமார் 20 ஆயிரம் மில்லியன் ரூபா செலவு ஏற்படும். எனினும், சரியான அறிக்கையை விரைவில் தருகின்றேன் - என்று கூறியுள்ளார். (ம-125)

# உள்ளூராட்சித் தேர்தல் திகதி இவ்வார இறுதியில் அறிவிப்பு

கொழும்பு, மார்ச்.3

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்கான திகதி இவ்வார இறுதிக்குள் அறிவிக்கப்படும் எனத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை மிக விரைவில் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் .

அத்தோடு 2023 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்காகச் செலுத்தப்பட்ட கட்டுப்பணத்தை விரைவில் திருப்பிச் செலுத்த நடவடிக்கை எடுக்குமாறு மாவட்டத் துணை மற்றும் உதவித் தேர்தல் ஆணையாளர்களுக்குத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# மாறுவேடத்தில் சென்று கஞ்சா வியாபாரியை அமுக்கிய 'சி.ஐ.டி.'

யாழ்ப்பாணம், மார்ச் 3

இளவாலைப்பொலிஸ்பிரிவுக்குட்பட்ட மாதகல் பகுதியில் 128 கிலோ கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வவுனியாவில் இருந்து வருகை தந்த புலனாய்வாளர்கள் கஞ்சா யாழ் மாவட்ட விசேட அதிரடிப்படையினருடன் இணைந்து இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

யாழ்பாணம் மாதகல் பகுதியில் கஞ்சா விற்பனையில் ஈடுபடும் நபர் ஒருவருடன் கஞ்சா தேவை எனக்கூறி கஞ்சாவினை கொள்வனவு செய்வது போல் வருகை தந்து குறித்த நபரின் வாடகை வீட்டில் வைத்து சந்தேகநபரை மடக்கிப் பிடித்துள்ளனர். (ச-125)



# ஹரக்கட்டாவின் உதவியாளர் கைது

கொழும்பு, மார்ச் 3

திட்டமிட்ட குற்றவாளி மற்றும் போதைப்பொருள் கடத்தற்காரரான ஹரக்கட்டாவின் உதவியாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மிதிகம நந்துன் சிந்தக விக்கிரமரத்ன எனப்படும் நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதானவரிடமிருந்து 48 ரி- 56 ரகத் துப்பாக்கி களும் தோட்டாக்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவர் மிதிகம வெதகே வத்தப் பகுதியைச் சேர்ந்த 33 வயதானவர் எனத் தெரியவருகிறது. (ச-இ)

## சாரதிகள் பற்றாக்குறை

# 50 ரயில்கள் தினசரி இரத்து

பல ஆண்டுகளாகத் தொடருந்து சாரதிகளுக்கான வெற்றிடங்களை நிரப்பத் தவறியதால் நாளாந்தம் 50 ரயில்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று தொடருந்து ஓட்டுநர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

முன்பு நாளொன்றுக்குச் சுமார் 390 தொடருந்து சேவைகள் இடம்பெற்றன. ஆனால் இன்று 340 சேவைகளாகக் குறைக்கப்பட்டுள்ளது.

458 தொடருந்து ஓட்டுநர்களில், தற்போது 220 பேர் மட்டுமே பணியாற்றுகின்றனர். 238 ஓட்டுநர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகின்றது. இதற்கு நிரந்தரத் தீர்வு காணப்படாவிட்டால் எதிர்காலத்தில் மேம்பட்ட தொடருந்து சேவையை எதிர்பார்க்கமுடியாது. இந்த நிலைமை தொடர்ந்தால், தொடருந்து சேவைகளின் செயற்பாட்டில் கடுமையான பாதிப்புகள் ஏற்படக்கூடும் என்றும் தொடருந்துச் சாரதிகள் சங்கத்தின் செயலாளர் சந்தன வியந்துவ தெரிவித்தார். (ச-இ)




**எங்க கல்லெறிபட்டாலும் நாய் காலைத் தூக்கிறமாதிரி, இஞ்ச ஏதும் ஸ்ட்ரைக் எண்டால் உடன எல்லாரும் பெற்றோல் செற்றுக்கு முன்னால லைனில நிக்கத் தொடங்கிடுவம். 'போனால் வராது பொழுதுபட்டால் கிடைக்காது' எண்ட கணக்கில எல்லாரும் அடிச்சுப்பிடிச்சுக்கொண்டு போய் லைனில நிக்கிறதாலதான் செற்றுகளில வேளைக்கே பெற்றோல் முடியுது. அப்பிடி எல்லா செற்றிலையும் இப்பிடி ஒரேநேரத்தில பெற்றோல் முடிஞ்சா லைன் இன்னும் நீளமாகி, செயற்கையா ஒரு தட்டுப்பாட்டை நாங்கள்தான் உருவாக்கிறம். அதோட எல்லா செற்றிலையும் ஒரேயடியா பெற்றோல் முடிஞ்சா, அதுகளுக்கு ஒரேயடியா பெற்றோல் அனுப்பவும் ஏலாது. ஓர்டர் கிடைச்ச ஒழுங்கிலதான் பெற்றோல் கட்டம் கட்டமா வரும். அப்பிடி ஒரு கட்டம் வந்து அடுத்த கட்ட பவுஸர் வாறதுக்குள்ள இஞ்ச நாங்கள் லைனில நிண்டு, முதல் வந்த பெற்றோலை வழிச்சுத் துடைச்சுப் போட்டு நிப்பம். அப்ப 'பெற்றோல் தட்டுப்பாடு' எண்ட கட்டுக்கதை உண்மையாகி, கடைசியில தொடர் கதையாகிடும்.**

**இந்தமுறை பெற்றோலுக்குத் தட்டுப்பாடு எண்டு கதையைக் கட்டினதே உந்த விநியோகஸ்தர்மார்தான். அவைக்குப் பெற்றோல் நூற்றியெழுவது ரூபா விக்கேக்க, கொமிசனாக் குடுத்த காசு பத்தாது எண்டு 3 சதவீதமா அந்தக் கொமிசனை அரசாங்கம் கட்டினது. ஆனால் பிறகு பெற்றோலின்ர விலை நானூறு ரூபாவரைக்கும் போய் இப்ப முந்நூற்றுச் சொச்சம் ரூபா விக்கேக்கையும் அதே 3 வீதக் கொமிசன்தான் குடுபடுகுது. மூண்டு வருசத்துக்கு முதல் கிடைச்சதைவிட இப்ப மூண்டு மடங்கு காசு அவைக்குக் கிடைக்குது. அது பிழை எண்டும், அதால 3500 கோடி ரூபா நட்டமெண்டும் முந்தின அரசாங்கங்களின்ர காலத்திலையே கண்டுபிடிச்சு, அப்பிடி கொமிசன் குடுக்கவேண்டாம் எண்டு நீதிமன்றமும் உத்தரவு போட்டது. ஆனால் உந்த விநியோகஸ்தர்மாரெல்லாரும் அரசாங்கத்தோட நல்ல ஒட்டா இருந்ததால, அந்த 3 வீதக் கொமிசன் குறைபடேலை. இப்ப திசைகாட்டிக்காரர் அந்த நீதிமன்ற உத்தரவுப்படி, பெற்றோலுக்காக விநியோகஸ்தர்மாருக்குக் குடுத்த 3 வீதக் கொமிசனை நிப்பாட்டி இருக்கினம். இவ்வளவுநாளும் கொள்ளை லாபம் பார்த்தவைக்கு, இப்பிடி அரசாங்கம் திடீரெண்டு ஆப்பு வைக்கும் எண்டு தெரியாமல் போட்டுது.**

**அந்தப் பதற்றத்திலதான் இப்பிடி பெற்றோலுக்குத் தட்டுப்பாட்டை உருவாக்கினால், தாங்கள் சொல்லுறபடி அரசாங்கம் கேக்கும் எண்டு நினைச்சுத்தான் விநியோகஸ்தர்மார் இந்த ஸ்ட்ரைக்கில இறங்கினவை. அதாலதான் 'இனி நாங்கள் பெற்றோலுக்கு ஓர்டர் குடுக்கமாட்டம் அதால கட்டாயம் தட்டுப்பாடுதான்' எண்டு வானிலை அறிக்கை மாதிரிச் சொல்லிக்கொண்டுமிருந்தவை. ஆனால் அப்பிடி மீடியாக்களுக்குச் சொன்ன விநியோகஸ்தர்மார் சிலர் ஆருக்கும் தெரியாமல் புதுசா பெற்றோலுக்கு ஓர்டர் போட்டிருக்கினம். தட்டுப்பாடு இல்லாம பவுஸர்க்கணக்கில பெற்றோல் எல்லா இடமும் வந்தபடியும் இருக்கு. இதால இப்ப விநியோகஸ்தர்மாருக்குள்ளயே பிடுங்குப்பாடாம். பெற்றோலை வைச்சும் அரசியல் செய்ய வெளிக்கிட்டால் இப்பிடித்தான் கண்டியளோ.**

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** செலவுகளைச் சமாளிக்கத் தேவையான பணம் இருப்பதால் மகிழ்ச்சியாகக் காணப்படுவீர்கள். தாய்வழி உறவினர்கள் வகையில் சுபச்செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளது. சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்.

**இடபம்:** அதிர்ஷ்டகரமான நாளாக இருக்கும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆனால், புதிய முயற்சிகளைத் தவிர்த்துவிடவும். அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும். விற்பனையும் லாபமும் மகிழ்ச்சி தரும்.

**மிதுனம்:** வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். அரசாங்கக் காரியங்கள் சற்று இழுபறிக்குப் பிறகே முடியும். திடீர்ப் பயணம் மேற்கொள்ள நேரிடும்.

**கடகம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். அலுவலகத்தில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பொறுமை காப்பது நல்லது.

**சிம்மம்:** மனதில் இனம் தெரியாத குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். பிற்பகலுக்கு மேல் உற்சாகமாகக் காணப்படுவீர்கள். தாயின் ஆலோசனைப்படி செயற்படுவது நன்மை தரும். பணம் கிடைப்பதில் தாமதம் ஏற்படக்கூடும். பணிகளில் கூடுதல் கவனம் தேவை.

**கன்னி:** புதிய முயற்சி சாதகமாக முடியும். கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்து வேற்றுமை நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். தாயின் உடல் நலனில் கவனம் தேவை. உற்சாகமும் மகிழ்ச்சியும் ஏற்படும்.

**துலாம்:** மனதில் தைரியம் அதிகரிக்கும். காரியங்களில் வெற்றி உண்டாகும். புதிய முயற்சி எடுப்பதற்கு உகந்த நாள். எதிரிகள் வகையில் ஏற்பட்ட பிரச்சினைகள் மறையும். குடும்பம் தொடர்பாக எடுக்கும் முடிவு சாதகமாக முடியும்.

**விருச்சிகம்:** எதிலும் பொறுமை அவசியம். சகோதரர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பிள்ளைகளால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். சலுகை கிடைப்பது தள்ளிப் போகும். பணியாளர்கள் நல்லபடி ஒத்துழைப்பார்கள்.

**தனுசு:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். வெளியூரிலிருந்து நீண்டநாளாக எதிர்பார்த்த நல்ல செய்தி கிடைக்கக்கூடும்.

**மகரம்:** உற்சாகமான நாள். மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். இளைய சகோதரர்களால் அனுகூலம் உண்டாகும். புதிதாகத் தொடங்கும் முயற்சி சாதகமாக முடியும். மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும்.

**கும்பம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். தேவையற்ற செலவுகள் ஏற்படுவதால் மனதில் சஞ்சலம் ஏற்படக்கூடும். குழப்பம் ஏற்பட்டு நீங்கும்.

**மீனம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். முக்கிய முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். மனஸ்தாபம் நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். செலவுகள் ஏற்படக்கூடும்.

# தொற்றாநோய்களுக்கு வழிகோலும் சீரற்ற உணவுப்பழக்கவழக்கங்கள்!

## உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், மார்ச் 3**

**தொற்றுநோய்களுக்கு நாங்கள் கொடுக்கும் முக்கியத்துவத்தைத் தொற்றாநோய்களுக்குக் கொடுப்பதில்லை. எங்களின் உணவுப்பழக்கவழக்கம், வாழ்க்கைமுறை காரணமாக மொத்தச் சனத்தொகையில் மூன்றில் ஒருபகுதி மக்கள் தொற்றாநோய் ஆபத்தை எதிர்கொண்டிருக்கிறார்கள் என்று உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி கெ.இந்திரமோகன் தெரிவித்துள்ளார்.**

இணுவில் ஆரம்ப மருத்துவப் பராமரிப்பு நிலையப் பார்வையாளர் வரவேற்புக் கட்டடத் திறப்பு விழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகப் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாம் பாரம்பரிய உணவுப்பழக்கவழக்க முறைகளிலிருந்து விட்டு விலகியுள்ளோம். எங்கள் உடல் உழைப்பைக் குறைக்கின்ற வகையில் எங்கள் வாழ்க்கையை இலகுவாக நடத்துவதற்காக வேகத்தைக் கையிலெடுத்தோம். எங்கள் வாழ்க்கை முறையை நாங்களே சுய ஆய்வுக்கு உட்படுத்தினால் சரியான விடையை கண்டறியக்கூடியதாகவிருக்கும். எங்கள் பாரம்பரியம், தமிழ்மக்களின் பண்பாட்டில் ஏற்கனவே இருக்கின்ற விடயங்க ளைச் சற்று இறுக்கமாக நடைமுறைப்படுத்தினால் ஆரோக்கியமான வாழ்க்கைமுறையை நோக்கி நாங்கள் நகரலாம்.

எமது முன்னோர்களின் வாழ்க்கை முறையை இன்றைய தலைமுறையினர் தொடர்ந்தும் சரியாகக் கடைப்பிடித்து வந்தாலே மகிழ்ச்சியான வாழ்வியலாக வாழ்ந்து காட்ட முடியும் - என்றார். (ச-66)

# ஏகசண்டி ஹோமம்

யாழ்ப்பாணம், மார்ச். 3

பருத்தித்துறை கோட்டுவாசல் அருள்மிகு ஸ்ரீ சண்டிகா பரமேஸ்வரி ஆலயத்தில் எதிர்வரும் 13 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6 மணிக்குக் கிரியைகளுடன் ஆரம்பமாகி ஏகசண்டி ஹோமம் இடம்பெறவுள்ளது.

பூஜைக்குத் தேவையான பால், இளநீர், தயிர், பழ வகைகள், பூக்கள் போன்ற அபிசேகப் பொருள்களை வழங்கி சண்டிகா பரமேஸ்வரி அம்பிகையின் அருளைப் பெற்றுக்கொள்ளுமாறு ஆலய நிர்வாகத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (ச-25,100)

# குருதிக்கொடை

யாழ்ப்பாணம், மார்ச் 3

பொன்னம்பலம் நீதிராஜாவின் ஞாபகார்த்தமாக 78 ஆவது இரத்ததானமுகாம் வல்வெட்டித்துறை நெடியகாடு பகுதியில் அமைந்துள்ள கணபதி மஹால் திருமண மண்டபத்தில் எதிர்வரும் 13 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணி முதல் இடம்பெறவுள்ளது.

வல்வெட்டித்துறைப் பிரதேச மருத்துவர், நோயாளர் நலன் புரிச் சங்கத்தினர் மற்றும் வல்வெட்டித்துறை இரத்ததானச் சங்கத்தினர் ஆகியோரின் ஏற்பாட்டில் இந்தக் குருதிக் கொடை முகாம் இடம்பெறவுள்ளது. (ச-25,100)

# கலாதீபம் இதழ் வெளியீடு

யாழ்ப்பாணம், மார்ச் 3

கோப்பாய் ஆசிரியர் கலாசாலைச் சமூகத்தினரால் மாதாந்தம் வெளியிடப்படும் கலாதீபம் மின்னிதழ் வெளியிடப்பட்டுள்ளது. கலாசாலையில் இடம்பெற்ற நிகழ்வுகளின் தொகுப்பாகக் குறித்த இதழ் வெளிவந்துள்ளது.

இதனை noolaham.org எனும் இணையத்தள முகவரிக்குச் சென்று தரவிறக்கம்செய்து பார்வையிடலாமெனக் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் ச.லலீசன் தெரிவித்துள்ளார். (ச-41-66)

# ஜனவரி மாதத்தின் 'Cash Bonanza' வெற்றியாளருக்கு ரூ.1,000,000ஐ SLTMOBITEL பரிசளித்தது

தொலைத்தொடர்பாடல் துறையில், இலங்கையின் மாபெரும் வாடிக்கையாளர் வெகுமதித் திட்டமாக அறியப்படும், SLT MOBITELஇன் 'Cash Bonanza' திட்டத்தின் ஜனவரி மாத வெற்றியாளராக தெரிவு செய்யப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த R.யஜிந்தனுக்கு SLTMOBITEL ரூ.1,000,000 பெறுமதியான பணப்பரிசை அன்பளிப்புச் செய்தது.

இந்த அன்பளிப்பு வழங்கும் நிகழ்வு பெப்ரவரி 25 அன்று மொபிடெல் தலைமையகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் SLTMOBITELஇன் பிரதம செயற்பாட்டு அதிகாரி, பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி மற்றும் பிரதி பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

கடந்த காலங்களில் மில்லியனர்களை உருவாக்கியமைக்காக புகழ்பெற்றுள்ள SLTMOBITELஇன் 'Cash Bonanza', இவ்வருடமும் அனைவரும் வெற்றியாளராக திகழ்வதற்கான வாய்ப்பை வழங்கும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் ஊடாக அதிர்ஷ்டசாலி வெற்றியாளருக்கு ரூ. 3 மில்லியன் பெறுமதியான பணப்பரிசை ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையும் மேலும் ரூ.1 மில்லியன் பெறுமதியான பணப்பரிசுத் தொகையை மாதாந்தம் வெற்றிபெறுவதற்கான வாய்ப்பும் வழங்கப்படும்.

நீங்களும் வெற்றியாளராக விரும்பினால் ரூ.100 எனும் சிறிய ரீலோட் செய்வதன் மூலம், ரீலோட் மூலமான பிளான் செயற்படுத்தல் மூலம் அல்லது SLT Mobitel Mobile இணைப்பிற்கான பட்டியலை செலுத்துவதன் மூலம் Cash Bonanza திட்டத்தில் பங்கேற்க முடியும்.

SLTMOBITEL முன்னெடுத்துள்ள இத் தேசிய மட்ட வெகுமதித் திட்டம், நாடெங்கும் உள்ள அதன் விசுவாசமிகு வாடிக்கையாளர்களிற்கு அவர்களின் வாழ்க்கையை மாற்றியமைக்க வல்ல பணப்பரிசை வெல்லும் வாய்ப்பை வழங்குகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

வெற்றி என்பது இறுதியானது அல்ல, தோல்வி என்பது அபாயகரமானது அல்ல, தொடர்வதற்கான தைரியம்தான் முக்கியமானது.


– வின்ஸ்டன் சர்ச்சில்–

# ஆனைகளாக மாறிய ஆணைக்குழுக்கள்

'ஆனையை வளர்த்த அரசனும் ஆண்டியாவான்' என்று பொதுவாகச் சொல்வார்கள். யானைகளை அரசர்கள்கூட பராமரிப்பதென்பது மிகப்பெரிய செலவினத்தையே ஏற்படுத்தும். யானைக்கென மிகப்பெருமளவிலான உணவுப்பொருள்களை தினமும் கொடுக்கவேண்டும், அதைக் குளிப்பாட்ட வேண்டும். அதனைப் பராமரிக்க ஒரு பாகனை வேலைக்கு வைத்திருக்கவேண்டும், அவற்றைக் கட்டிவைக்கவும் மிகப்பெரிய இடமொன்றை ஒதுக்கிவைத்திருக்க வேண்டும் . இவற்றுக்கு மிகப்பெரும் பணத்தைச் செலவிடவேண்டும். இவை தவிர யானைகள் நோய் வாய்ப் பட்டாலோ, அல்லது அவற்றை வேறு இடங்களுக்கு கொண்டு செல்லவேண்டுமென்றாலோ அதற்கும் தனியான செலவுண்டு. தாய்லாந்து அரசாங்கம் அன்பளிப்பாக வழங்கிய முத்துராஜா என்ற யானையை இலங்கை அரசாங்கம் சீராகப் பராமரிக்கமுடியாமல், அந்த யானையை மீண்டும் தாய்லாந்து அரசாங்கம் மீளப்பெற்றுக்கொண்ட சம்பவத்தைக் கூட 2023 ஆம் ஆண்டு நம் நாட்டில் கண்டுகொண்டோம். ஆனைகள் மட்டுமல்ல, ஆணைக்குழுக்கள் கூட இப்படி நாட்டின் நிதியை விழுங்கியிருப்பது இப்போதுதான் வெளிச்சத்துக்கு வந்திருக்கிறது.

கடந்தகாலங்களில் அரசாங்கத்துக்கு நெருக்கடிகளைக் கொடுத்த விடயங்கள் தொடர்பில் உடனடியாக ஏற்படும் கொந்தளிப்பைத் தடுக்க ஓர் உபாயம் கைக்கொள்ளப்பட்டது. அதுதான் , ஆணைக்குழுக்களை அமைத்தல். காணாமல் போனோர் பிரச்சினை, இனப்படுகொலை முதல் ஈஸ்டர் தாக்குதல் வரை ஆணைக்குழுக்களின் எண்ணிக்கை மிக உயர்வானது. இந்த ஆணைக்குழுக்களை அமைப்பதன் மூலம் குறித்த பிரச்சினை தொடர்பில் அரசாங்கம் அக்கறையோடுதான் செயற்படுகின்றது என்று மக்களையும், சர்வதேசத்தையும் அரசாங்கம் அமைதிப்படுத்தமுடியும். அத்தோடு ஆணைக்குழுக்கள் தம் விசாரணையை முடிவுறுத்தி, அறிக்கையைச் சமர்ப்பிக்க மிகநீண்டகாலத்தை எடுத்துக்கொள்வதால், ஒருகட்டத்தில் குறித்த பிரச்சினை பழங்கஞ்சியாகி மக்கள் அதனை மறந்தே விடுவார்கள். இத்தகைய அனுகூலங்களுக்காகவே இப்படித் தீர்க்கமுடியாத பிரச்சினைகளுக்கு சர்வரோக நிவாரணி போல அரசாங்கங்கள் ஆணைக்குழுக்களை நியமித்துவந்தன. ஆனால் இந்த ஆணைக்குழுக்களின் நியமனத்தால் 2016 ஆம் ஆண்டில் இருந்து இதுவரையான சுமார் 10 வருட காலத்துக்குள் மட்டும் 5 ஆயிரத்து 301 லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளதாக ஆளும் கட்சியின் பிரதம கொறடா நளிந்த ஜயதிஸ்ஸ அதிர்ச்சித்தகவலை வெளியிட்டுள்ளார்.

அதைவிடப் பேரிடியான விடயம் என்னவென்றால் இவ்வளவு நிதியை ஏப்பமிட்டபின்னரும் இந்த ஆணைக்குழுக்களில் பெரும்பாலானவை அவற்றின் அறிக்கையைச் சமர்ப்பிக்கவில்லை என்பதுதான். இன்னும் சில ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் காணமலாக்கப்பட்டுள்ளன. அறிக்கையைச் சமர்ப்பிக்காத ஆணைக்குழுக்களுக்கு ஏன் நிதி வழங்கப்பட்டது , அந்த ஆணைக்குழுக்கள் அறிக்கை வழங்காமைக்கான காரணம் என்ன, இது தொடர்பில் அந்த ஆணைக் குழுக்கள் மீது அக்காலத்தில் இருந்த அரசாங்கங்கள் எடுத்த நடவடிக்கைகள் எவை என்ற கேள்விகளுக்கும் விடையில்லை. அந்தக் கேள்விகளுக்கான விடையைத் தேடினால், அதன்மூலம் பல புதிய உண்மைகள் வெளிவரக்கூடும். அதுதவிர ஆணைக்குழுக்களின் அறிக்கை காணாமல்போன விடயத்திலும் அரசு தன் பார்வையைச் செலுத்தவேண்டும். அந்த அறிக்கைகளை மீட்டெடுத்து மக்கள் முன் பகிரங்கப்படுத்தினால், சில மர்மங்கள் தொடர்பில் மக்களுக்குத் தெளிவுபிறக்கக் கூடும். ஆனைகளாக 5 ஆயிரம் லட்சம் ரூபாவுக்கும் அதிகமாக விழுங்கியும் ஆணைக்குழுக்களால் எந்தப் பயனும் கிட்டவில்லை. இந்த ஆணைக்குழுக்களை வைத்து காலத்தை இழுத்தடித்து, மக்களை திசைதிருப்பும் கலாசாரத்தையும் இத்தோடு ஒழிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.




# புதிய அரசியலமைப்பு விரைவில் இயற்றப்படும்



## நீதியமைச்சர் வாக்குறுதி

கொழும்பு, மார்ச்.3

**வடக்கு, கிழக்கு மாகாண மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை நாங்கள் நன்கு அறிவோம். சிறந்த திட்டமிடலுடன் புதிய அரசியலமைப்பு வெகு விரைவில் உருவாக்கப்படும். தமிழ் மக்கள் வழங்கியுள்ள ஆணையைப் பாதுகாப்போம் என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடுகள் அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் பல்வேறு கேள்விகள் முன்வைக்கப்பட்டுள்ளன. யாப்புருவாக்க வாக்குறுதியை மக்களுக்கு வழங்கினோமே தவிர எதிர்க்கட்சிகளுக்கு வழங்கவில்லை. சிறந்த மாற்றத்துக்காகவே தமிழ் மக்கள் எமக்கு ஆணை வழங்கியுள்ளார்கள். அந்த ஆணையை நாங்கள் பாதுகாப்போம். அவர்களின் பிரச்சினைகளுக்குச் சிறந்த தீர்வைப் பெற்றுக்கொடுப்போம் - என்றார். (ச-இ)

# இலங்கையில் பிறப்புவீதம் சரிவு

கொழும்பு, மார்ச்.3

நாடு முழுவதிலும் உள்ள மருத்துவமனைகளில் பதிவு செய்யப்படும் கர்ப்பிணித் தாய்மார்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாக அரசாங்க குடும்ப சுகாதார சேவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் பிறப்புவீதமும் குறைந்துள்ளது என்றும் அந்தச் சங்கத்தின் தலைவர் தேவிகா கொடித்துவக்குத் தெரிவித்தார். (ச-இ)

# 16 தொன் நெல் அரசாங்கத்தால் கொள்வனவு


கொழும்பு, மார்ச் 3

அரசாங்க நெல் சந்தைப்படுத்தல் சபையினால் தற்போதுவரை 16 தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை புழுங்கல் அரிசிக்கான நெல் ஒரு கிலோவுக்கு அரசாங்க உத்தரவாத விலையாக 120 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ள போதும், தனியார் வர்த்தகர்கள் அதனை 125 ரூபாவுக்கு விற்பனைசெய்கின்றனர். இதன்காரணமாக விவசாயிகள் தனியார் வர்த்தகர்களை நாடும் நிலை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# சரிவடைகின்றது தேங்காய் விலை

கடந்தவாரத்துடன் ஒப்பிடும்போது சந்தையில் தேங்காய் விலை தற்போது படிப்படியாக குறைந்துவருவதாக நுகர்வோர் தெரிவித்துள்ளனர். கடந்தவாரம் 250 ரூபாவாக இருந்த தேங்காய் ஒன்றின் விலை, தற்போது 200 ரூபா முதல் 220 ரூபாய் வரை குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தற்போது காணப்படும் சீரற்ற காலநிலை காரணமாக தேங்காய்களின் எதிர்கால விலை குறித்து துல்லியமான அறிக்கையை வெளியிடமுடியாது என வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். (ச-இ)



# வலி நிவாரணி மாத்திரைகளுடன் ஒருவர் கைது

கொழும்பு, மார்ச் 3

இந்தியாவிலிருந்து படகு மூலம் சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் சுமார் 100 மில்லியன் ரூபா மதிப்புள்ள 5 இலட்சம் வலி நிவாரணி மாத்திரைகளைக் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் பறிமுதல் செய்துள்ளனர். இந்த மாத்திரைகள் போதைப்பொருள் பயன்படுத்துபவர்களின் பயன்பாட்டுக்காகக் கொண்டுவரப்பட்டதாகத் தகவல் தெரியவந்துள்ளது. (ச-இ)



நாளை
செவ்வாய்க்கிழமை - மாசி - 20
04.03.2025
சுபநேரம் : 03.28 - 04.58
ராகுகாலம் : 09.28 - 10.58

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். வீதிகளைப் புனரமைப்புக்க ரூ.43,024 மில்லியன் தேவை

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், மார்ச்.3**

**யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து வகையான வீதிகளைப் புனரமைப்பதற்காக வும் அதுதொடர்பான இணைந்த செலவுகளுக்காகவும் 43 ஆயிரத்து 24 மில்லியன் ரூபா தேவை என்று யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத் தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

நேற்றுமுன்தினம் இரவு சூம் வழி தொழில்நுட்பத்தினூடாக இடம் பெற்ற வரவு -செலவுத் திட்ட ஒதுக்கீ டுகள் தொடர்பில் இடம்பெற்ற கூட் டத்தின்போதே இவ்வாறு சுட்டிக்காட் டப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த யாழ்.மாவட்ட பதில் செயலர், யாழ்ப்பாணத்தில் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான 137 கிலோமீற்றர் வீதிகளைப் புனர மைக்க 10ஆயிரத்து 370மில்லி யன் ரூபாவும் வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழான 116 கிலோ மீற்றர் வீதியைப் புனரமைக்க 5ஆயி ரத்து 655 மில்லியன் ரூபாவும் உள்ளூராட்சித் திணைக்களத்தின் கீழ் காணப்படுகின்ற ஆயிரத்து 597 கிலோமீற்றர் நீளம் கொண்ட வீதிக ளைப் புனரமைக்க 24ஆயிரத்து 165 மில்லியன் ரூபாவும் கமநல திணைக் களத்தின் கீழான வீதிகளைப் புனர மைக்க 558 மில்லியன் ரூபாவும் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்க ளத்தின் கீழ் உள்ள வீதிகளைப் புனர மைக்க 107 மில்லியனும் தேவைப்படு கிறது - என்றார். (ச-125)

# கஞ்சாவுடன் கைதாகிய சட்டத்தரணிக்குத் தண்டம்

வவுனியா, மார்ச் 3

வவுனியாவில் கஞ்சாவினை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட சட்டத்தரணி ஒருவருக்கு நீதிமன்று 10ஆயிரம் ரூபா தண்டம் விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

கடந்த 2021 ஆம் ஆண்டு வவுனியா செட்டிகு ளம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப் படையில் அந்தப் பகுதியில் வைத்து இளம்சட் டத்தரணி ஒருவரிடம் சோதனை நடத்தப்பட்ட போது அவரது உடைமையிலிருந்து கஞ்சா மீட்கப்பட்டதையடுத்து அவர் கைதுசெய்யப்பட்டு நீதிமன் றில் முற்படுத்தப்பட்டார்.

இந்த வழக்கு வவுனியா நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்றுவந்தநிலையில் கடந்த வெள்ளிக்கி ழமை இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சந்தேகநபர் சட்டத்தரணி குற்றவாளியென உறுதிப்படுத்தப்பட்டதைய டுத்து அவருக்கு 10ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. அதேவேளை குறித்த சட் டத்தரணி மேன்முறையீடு தொடர்பான அறிவித் தலை நீதிமன்றில் வழங்கியதன் பிரகாரம் மேன்முறையீட்டு வழக்கு நிலுவையில் இருப்ப தன் அடிப்படையில் அவருக்குப் பிணை வழங் கப்பட்டுள்ளது. (ச-110)

# 3 மாதங்களில் தாளையடி நன்னீர்த்திட்டம்



யாழ்ப்பாணம், மார்ச் 3

தாளையடியில் அமைக்கப்பட்டுள்ள கடல்நீரை நன்னீராக்கும் செயற்றிட்ட விநியோகம் மூன்றுமாத காலப்பகுதியி னுள் ஆரம்பமாகவுள்ளது. குறித்த பணி கள் தொடர்பாக வடக்கு மாகாண ஆளு நர் கடந்த வெள்ளிக்கிழமை நேரில் சென்று ஆராய்ந்தார்.

கடல்நீரை உள்ளெடுக்கும் நிலையம், சுத்திகரிப்பு மற்றும் விநியோகம் உள் ளிட்ட அனைத்துப் பகுதிகளையும் பார் வையிட்டார். இதன்போது திட்டப் பணிப் பாளர் மற்றும் பொறியியலாளர்களால் உரிய விளக்கங்களும் ஆளுநருக்கு வழங்கப்பட்டன. (ச-125)

# கடற்பரப்புகளில் காற்றின் வேகம் உயர்வு

பருவக்காற்று மாறுதல் காரண மாக சீரற்ற காலநிலை தொடரும் என்று யாழ்.மாவட்டப் பிராந்திய வளிமண்டலவியல் ஆராய்ச்சித் திணைக்க ளத்தின் சிரேஷ்ட உத்தி யோகத்தர் தர்மரத்தினம் பிரதீபன் உதயனுக்குத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.மாவட்டத்தில் கடந்த வெள்ளிக் கிழமை முதல் இரவுவரை பெய்த மழையில் அதிகூடிய மழைவீழ்ச்சி திருநெல்வேலிப் பகுதியில் 55.0 மில்லிமீற்றராகப் பதிவாகியுள்ளது.

அதேவேளை பருவக்காற்று மாறு தல் காரணமாக சீரற்ற காலநிலை தொடரும். வடகிழக்குத் திசையில் வீசும் காற்றின் வேகம் மணிக்கு 30-40 கிலோமீற்றர் வேகத்தில் வீசக்கூடும்.

கொழும்பில் இருந்து மன்னார் மற்றும் காங்கேசன்துறை ஊடாக திருகோணமலை வரையிலும் காலியிலிருந்து அம்பாந்தோட்டை ஊடாகப் பொத்துவில் வரையான கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50-55 கிலோமீற்றர்வரை அதிகரித்து வீசக்கூடும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-125)

# உண்டியல் திருட்டு

யாழ்ப்பாணம், மார்ச்.3

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று பிலிப்பு நேரியார் ஆலயத்தில் காணிக்கை உண்டி யல் நேற்றுமுன்தினம் களவாடப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று ஆலயத்துக்கு வழிபாட்டுக்காகச் சென்றிருந்த மக்கள் குறித்த காணிக்கை உண்டியல் ஆலயத்தில் இல்லாததை அவதா னித்ததையடுத்து சம்பவம் தொடர்பாக பங்குத் தந்தை மற்றும் ஆலய அருட்பணிச் சபையின ருக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. (ச-27)

# மூன்று வாகனங்கள் சமநேரத்தில் விபத்து

யாழ்ப்பாணம், மார்ச் 3




யாழ்ப்பாணத்தில் மூன்று வாகனங்கள் கடந்த வெள் ளிக்கிழமை ஒன்றோடு ஒன்று மோதி விபத்துக் குள்ளாகியுள்ளன.

யாழ்ப்பாணம் பிரவுண் வீதி சந்தியில் முச்சக்கரவண்டியும் மோட் டார்சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளான துடன் அதேசமயம் வீதியில் நின்றிருந்த மோட்டார்சைக்கிளொன்றையும் முச்சக்கர வண்டி மோதித் தள்ளியுள்ளது. இந்த விபத் தில் எவ்வித சேதங்களும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச-27)

# வெள்ளம் வழிந்தோடும் பகுதியில் அனுமதிக்கு முரணாக நிலக்கற்கள்

## அரச திணைக்களத்தின் நடவடிக்கையால் மக்கள் அந்தரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச். 3

யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் முன் பாக அனுமதிக்கு முரணான முறை யில் பதிக்கப்பட்ட நிலக்கற்களால் அதன் அருகிலுள்ள அலுவலகங்க ளின் நுழைவாயில் பகுதிகள் வெள் ளத்தில் மூழ்கியுள்ளன.



வெள்ளம் வழிந்தோடும் வீதியில் உள்ள பகுதியில் நிலக்கற்கள் பதிக் கப்பட்டமையாலேயே வெள்ளநீர் தேங்குவதாக அந்தப் பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பாக யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையா ளர் அலுவலகத்துக்கு அனுப்பிய தகவல் அறியும் சட்ட விண்ணப்பத் துக்கு கிடைத்த பதிலில், யாழ்.மாந கர சபையின் அனுமதியுடனேயே இந்த நிலக்கற்கள் பதிக்கப்பட்ட தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் யாழ். மாநகரசபை யினிடம் தகவல் அறியும் சட்டத்தி னூடாகக் கேட்கப்பட்டபோது, தாங்கள் வழங்கிய அனுமதி விவ ரத்தை வழங்கியுள்ளனர்.

அதன்பிரகாரம் யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையா ளர் அலுவலகத்தினர் மாநகரசபை வழங்கிய அனுமதிக்கு முரணாக சட்டவிரோதமான முறையில் நிலக் கற்களைப் பதித்துள்ளமை தெரிய வந்துள்ளது.

எனவே வெள்ளநீர் மற்றும் கழிவு நீர் வெளியேறாத வகையில் பதிக் கப்பட்ட நிலக்கற்களைச் சீர்செய்ய வேண்டும். அல்லது தேங்கியுள்ள நீரை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர். (ச-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஊடகர் விக்டர் ஐவனுக்கு ஊடக அமையத்தில் அஞ்சலி

யாழ்ப்பாணம், மார்ச் 3

இலங்கையின் ஊடக வரலாற்றில் புலனாய்வுச் செய்தியிடல் ஊடகப் பரப்பில் கோலோச்சி மறைந்த ராவய பத்திரிகையின் ஆசிரியர் விக்டர் ஐவனுக்கு யாழ். ஊடக அமையத்தின் பங்களிப்புடன் அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் ஏற்பாட்டில் நினைவுகூரல் நிகழ்வு யாழ். ஊடக அமையத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இடதுசாரிக் கொள்கையைக் கொண்ட 1949 முதல் 2025 வரையான அவரது வாழ்க்கை வரலாற்றில் சுமார் 35 வருட காலமாக இலங்கையின் இதழியல் துறையில் மட்டுமின்றி நாட்டின் அரசியல் சமூகத்திலும் தனக்கென்று ஒரு இடத்தை வகுத்து துணிச்சலுடன் செயற்பட்டு வந்த விக்டர் ஐவன் கடந்த ஜனவரி 19ஆம் திகதியன்று காலமானார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-41-27)

## சடங்குகள் செய்வித்துக் கொடுக்கப்படும்

மரணச்சடங்கு, அந்தியேட்டி, சாந்தி வகைகள் அனைத்தும் பொருத்தமாகவும், உதிரியாகவும் செய்து கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு

077 525 2982, 076 909 7435

மீசாலை பொன் உமாமகேஸ்வர குருக்கள்

(CR/44459) L-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 08 . 1949



மறைவு 02 . 03 . 2025

### பீதாங்கனியம்மா கனகசபாபதி (வள்ளியம்மா)
### (பீதாங்கனியம்மா அறக்கட்டளை - போசகர்)

தேவன் குறிச்சி இலக்கணாவத்தை உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பீதாங்கனியம்மா கனகசபாபதி நேற்று (02.03.2025) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் - சின்னத்தங்கம் தம்பதியரின் ஏகபுத்திரியும், கனகசுந்தரம் - தங்கமுத்து தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான கதிர்காமத்தம்பி, நடனசிகாமணி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற கனகசபாபதியின் அன்பு மனைவியும் ஜெகதீஸ்வரி (ஆசிரியர் - யா/ தொண்டைமானாறு வீரகத்திபிள்ளை மகாவித்தியாலயம்), காலஞ்சென்ற றதீஸ்வரி, ஜெயகாந்தன் (எமறல்ட் ஹாட்வெயார் - உடுப்பிட்டி), குணேஸ்வரி (ஆசிரிய ஆலோசகர் வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்), ஜெயசீலன் (ஆசிரியர் -யா/ மெதடிஸ்ற் பெண்கள் உயர்தர பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், விநாயககுமார் (உரிமையாளர்-துளசி களஞ்சியம் பரந்தன்), சசிகுமார் (ஆசிரியர் - யா/ மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம்), ஈஸ்வரி (சுகந்தி), காலஞ்சென்ற ரகுநாதன் மற்றும் சுகன்யா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பருத்தித்துறை) ஆகியோரின் அன்பு மாமியும், குமணன் (லண்டன்), தனுசா (மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கை நிறுவகம்), தசானி, கிருசிகா, சகானா, நிதுக்சிகா (யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி - மாணவிகள்), அஸ்விதா (யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை - மாணவி), அஸ்வின், அட்சயன் (யா/ யாழ் இந்துக்கல்லூரி), ஜெய்வர்தன் (யா/ தாமோதரா வித்தியாலயம் - கரணவாய்), ஜெய்ஹாரிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், உமாதேவி (லண்டன்), சசிகலா, (ஆசிரியர் - யா/ சென் மேரீஸ் வித்தியாலயம்), செல்வகுமார், சிவகுமார், சாந்தகுமாரி (கொழும்பு), ஈஸ்வரகுமார் (லண்டன்), நளாயினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.03.2025) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வும்.

தொடர்புகளுக்கு:
077 154 4294, 077 933 1470, 077 791 7443

தகவல்:
குடும்பத்தினர்.

(CS) N-1

## மரண அறிவித்தல்

பிறப்பு 12 . 07 . 1936



இறப்பு 28 . 02 . 2025

### சங்கரப்பிள்ளை சுந்தரம்பிள்ளை (ஆசாரியார்)

யாழ்ப்பாணம் வேலணையை (வங்களாவடி) பிறப்பிடமாகவும் வட்டக்கச்சி, கொழும்பு, வவுனியா கோவில் புதுக்குளத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை சுந்தரம்பிள்ளை (ஆசாரியார்) கடந்த 28.02.2025 வெள்ளிக் கிழமை இறைவன் திருப்பாதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், தனலெட்சுமி (பவளம்) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான சரவணமுத்து - இராசம்மா தம்பதியரின் அருமை மருமகனும், காலஞ்சென்றவர்களான கைலாசப்பிள்ளை, மகேஸ்வரி மற்றும் சபாரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தில்லைநாயகி (திருமகள் - ஓய்வுநிலை ஆசிரியர்), லோகேஸ்வரன் (லோகர்), ஜெயதீஸ்வரன் (ஜெயம் -சுவிஸ்லாந்து), சிவநாயகி (ஜீவா - இங்கிலாந்து), ஜெயகரன் (கரன் - இங்கிலாந்து), சுதாநாயகி (சுதா - பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தேவகுமார், கவிதா, சுரேகா, சுகந்தன், தேவசேனா, சுதாகரதாஸ் ஆகியோரின் அருமை மாமனாரும், மாதுரி, டினேஸ், கனிரதன், காலஞ்சென்ற தனுரதன் மற்றும் அட்சலா, அவேதனா, அனுஷி, சாரா, நிஜன், நிஜனீ, சுகனி, சுஜீவ், சுருதி, சிவானி, சேயோன், ஹரினி, ஜனனி, மெலானி ஆகியோரின் ஆருயிர் பேரனும், சாய்ஷின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.03.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோவில் புதுக்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
லோகர் (மகன்)
0094 7600 93571
ஜெயம் (மகன்)
0041 7631 02643

இல.04, 1ம் ஒழுங்கை,
கோவில்புதுக்குளம்,
வவுனியா.

(CS 2908) N-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 10 . 1934



மறைவு 28 . 02 . 2025

### குருசாமி சிவக்கொழுந்து

தென்மயிலை (கட்டுவனைப்) பிறப்பிடமாகவும், அளவெட்டி மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட குருசாமி சிவக்கொழுந்து கடந்த 28.02.2025 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - இரத்தினம் தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வல்லிபுரம் குருசாமியின் அன்பு மனைவியும், சிறீதர், புவனேந்திரன் (பிரான்ஸ்), ஜெயகௌரி (சுவிஸ்), சாந்தினி (பிரான்ஸ்), சுகுமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஞானேஸ்வரி, சறோஜினிதேவி (பிரான்ஸ்), சதானந்தராஜா (சுவிஸ்), சிவனேசமூர்த்தி (பிரான்ஸ்), சத்தியபிரேமா ஆகியோரின் மாமியும், காலஞ்சென்ற வேலாயுதம் மற்றும் பரமேஸ்வரி, சிவப்பிரகாசம், பூமலர் ஆகியோரின் சகோதரியும், சிறிவக்சன் - கீர்த்தனா, சுகன்ஜா - பிரதாபன், சஜீவன் - நிஷாந்தி, சத்தியா - கஜேந்திரன், விதுஷா - மதுசன், விபூசனா, சுஜன் - சாதியா, சுஜித்திரா - அருண், சுபேந்தினி, சுஞ்ஜிகா, சாங்கவி, கோஷிகா ஆகியோரின் பேர்த்தியும், யுகாசினி, லிஷான், ஜென்சியா, ஜெசிதரன், ஜெஸ்வின், ஜெனிலா, தேனுகா, தர்வின், மெலியா, ஜெசிம், தீரன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.03.2025) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் அளவெட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அளவெட்டி மத்தி,
அளவெட்டி.


தகவல்:
குடும்பத்தினர்.
077 613 4438

(CS) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 25 • 04 • 1936



மறைவு 02 • 02 • 2025

கடந்த 02.02.2025 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த
எங்கள் குடும்பத்தலைவர்

## அமரர் இராசநாயகம் வேலாயுதம்

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (04.03.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் மாதகல் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.**

**காஞ்சிபுரம்,
மாதகல்.**

**குடும்பத்தினர்
077 610 9143**

(cs.27010) (N-1)

# சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் (வ-து)
## விண்ணப்பம் கோரல்

சங்கத்தினால் பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகிறது. சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்ப படிவத்தினை 20/= செலுத்தி பெற்று பூரணப்படுத்தி பிறப்புச்சான்றிதழ், தே.அ.அட்டை, கல்வித்தகைமைச்சான்றிதழ் பிரதிகளுடன் 18.03.2025ம் திகதிக்கு முன்பாக விண்ணப்பங்களை தலைவர், சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம்(வ-து), சாவகச்சேரி, எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பபடிவத்தின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

**1. பதவி : கிளைமுகாமையாளர்.**
சம்பள குறியீட்டு இல : 208/14 (சுற்றுநிருப இல: 01/2021)
சம்பள அளவுத்திட்டம் : ரூபா 17900 - 155 x 10 - 165 x 10 - ரூபா 21100
(சு.நி.இல : 02 /2022)

இத்துடன் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றறிக்கை 02/2022ற்கு அமைய படிகளும் ரூபா.15000/= மேலதிக கொடுப்பனவும் வழங்கப்படும்.

**தகமைகள் :**
அ) கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம் / கூட்டுறவு ஊழியர் 16 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி./ க.பொ.த.சாதாரண தரப் பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் / தமிழ்மொழி, கணிதம் உட்பட 6 பாடங்களுடனான சித்தி.

**2. பதவி : காரியாலய சேவகர்**
சம்பள குறியீட்டு இல : 317/17(சுற்றுநிருப இல: 01/2021)
சம்பள அளவுத்திட்டம் : ரூபா 16515–130x10-145x10-ரூபா19265
(சு.நி இல : 02/2022)

இத்துடன் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றறிக்கை 02/2022ற்கு அமைய படிகளும் ரூபா.15000/= மேலதிக கொடுப்பனவும் வழங்கப்படும்.


அ) கூட்டுறவு ஊழியர் கனிஸ்ட தராதரப்பத்திரம்./ 08 ஆம் தர கல்விச் ... வயது 18 தொடக்கம் 45 வரை ... (சங்கப்பணியாளருக்கு வயதெல்லை பொருந்தாது) சங்க எல்லைப்பரப்பினுள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். வேறு கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து விண்ணப்பிப்பவர்கள் தங்களின் சங்கத்தின் ஊடாக விண்ணப் பித்தல் வேண்டும். இப்பதவிகளுக்கு விண்ணப்பம் செய்யும் விண்ணப்பதாரர்கள் தெரிவுசெய்யப்படுமிடத்து பிணை சங்கத்தில் செலுத்த தயாராக இருத்தல் வேண்டும்.

**தலைவர்,
சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம், கண்டிவீதி, சாவகச்சேரி.
03.03.2025**

(cr.44460) (N-1)

**T.P. 021 227 0830**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



கடந்த 13.03.2024 அன்று இறைவனடி சேர்ந்த

**எமது குடும்பத் தலைவர்**

## அமரர் விக்கினேஸ்வரன் பரமானந்தி

தோற்றம் 22.02.1948

மறைவு 13.03.2024

**திதி: சதுர்த்தி – 03.03.2025**

ஆண்டு ஒன்று உருண்டே ஓடிடினும்
உம் நினைவுகளால் நிறைந்த எம் மனம்
உமை எண்ணி தவிக்குதே அப்பா!
நினைவிலும் சரி நாம் செயும் செயலிலும் சரி
உம் ஞாபகங்கள் தினம் தினம்
எம்மை வாட்டுதே அப்பா !
உம் இடத்தே நாம் இருந்து
எதைச்செய்திடினும் உமக்கு ஈடாய்
ஏதும் இல்லையே அப்பா!
அரனடி நிழல் தன்னில் நீங்கள்
இளைப்பாறுவதே எமக்காய் இருக்கும்
ஓர் ஆறுதல் அப்பா! செயும் செயல்கள் யாவும்
உமை நெஞ்சினில் நிறுத்தி
நித்தமும் நாம் நினைக்கின்றோம் அப்பா!
மறுஜென்மம் என்றொன்று உண்டெனில்
எமக்கே ஆன ஓர் வரமாய்
எம்மிடமே வாருங்கள் அப்பா!
ஆவலோடு காத்திருக்கின்றோம் நாம்
ஆசையாய் உமை காண...!

**ஊரெல்லை வீதி, மீசாலை வடக்கு.
பிரான்ஸ் Noisiel**

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதை பயிற்சி பட்டறை

யாழ்ப்பாணம், மார்ச் 3

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் தமிழியற் கழகம் நடாத்தும் சிறுகதைப் பயிற்சிப் பட்டறை நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 8 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடக் கருத்தரங்கு மண்டபத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் கி.விசாகரூபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் மூத்த எழுத்தாளர் திருமதி. கோகிலா மகேந்திரன், எழுத்தாளர் இ.இராஜேஸ்கண்ணன் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-66)

## எரிபொருள்...

வித்தன. முன்பதிவு செய்யப்பட்ட எரிபொருள் நேற்றுக் கிடைத்திருந்தது என்றும், இன்றும் எரிபொருள் கிடைக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டதுடன், போதியளவு எரிபொருள் இருப்பு உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, எரிபொருள் வழமை போன்று விநியோகிக்கப்படும் என்றும், எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது என்றும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் தெரிவித்தார்.


எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் என்று கிளம்பிய வதந்திகளை அடுத்து யாழ்ப்பாணத்தில் பொதுமக்கள் அதிகளவான எரிபொருளைக் கொள்வனவு செய்ததாலேயே தற்காலிகமாக எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தது. ஆயினும் எரிபொருள் விநியோகம் இன்றும் (நேற்று) மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் வழங்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் வதந்திகளை நம்பி பெற்றோலை அதிகளவில் சேமிக்கவேண்டாம். அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் எரிபொருள் வழமைபோன்று கிடைக்கும் என்று தெரிவித்தார்.

இதேவேளை, நேற்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாளென்றபோதிலும், நேற்றும் பவுஸர்கள் மூலம் சகல எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் எரிபொருள் விநியோகம் இடம்பெற்றது. இதனால் வடக்கு மாகாணம் உள்ளிட்ட நாட்டின் சகல பகுதிகளிலும் எரிபொருளுக்கான வரிசைகள் நேற்றுக் காணாமல் போயிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

(அ-எ-26-7-17)


## மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 04 . 1937 — மறைவு 02 . 03 . 2025



### பண்டிதர் கந்தையா ஈஸ்வரநாதபிள்ளை

நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும், சுதுமலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா ஈஸ்வரநாதபிள்ளை அவர்கள் நேற்று (02.03.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா-தெய்வானைப்பிள்ளை தம்பதியின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லத்துரை-இராசம்மா தம்பதியின் அன்பு மருமகனும் மனோரஞ்சிதம் அவர்களின் பாசமிகு கணவரும், குமரன் (சிரேஷ்ட விரிவுரையாளர்,தமிழ்த்துறை-யாழ் பல்கலைக்கழகம்), அவர்களின் தந்தையும் சுபாசினி (ஆசிரியர்-யா/கோண்டாவில் இந்துக்கல்லூரி) அவர்களின் அன்பு மாமனாரும் சிவசங்கரி, சாரங்கன் ஆகியோரின் பேரனும் நல்லநாயகி, தியாகராஜா, கனகமணி, காலஞ்சென்ற ஜெகதீசன் மற்றும் இந்திராதேவி, தீனதயாளன் ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்றவர்களான ஞானசிரோன்மணி, மதனசுரேந்திரன் மற்றும் சரோஜினிதேவி, காலஞ்சென்றவர்களான இராசகுமார், உதயகுமார் ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்றவர்களான அழகரட்ணம், நாகேஸ்வரி மற்றும் காயாரோகணர், மீனலோஜினி, காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் தேவராணி, காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், பேரின்பநாயகி மற்றும் இராணி ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.03.2025) திங்கட்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

சிந்மய பாரதி வீதி,
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

தகவல் :
மகன்-ஈ.குமரன்
077 634 1359

(CR 44140) P-1

## மரண அறிவித்தல்

பிறப்பு 30 . 07 . 1946 — இறப்பு 01 . 03 . 2025



### மனோன்மணி தியாகராசா (மனோன்)

விளானை களபூமி காரைநகரைப் பிறப்பிடமாகவும் இல.1010/17 கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடியை (கண்ணன் இசைக்குழு ஒழுங்கை) வசிப்பிடமாகவும் கொண்ட மனோன்மணி (மனோன்) தியாகராசா அவர்கள் நேற்றுமுன்தினம் (01.03.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-சுந்தரம்மா தம்பதியின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-தெய்வானைப் பிள்ளை தம்பதியின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தியாகராசா அவர்களின் அன்புக் மனைவியும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, சோமசுந்தரம், பரராசசிங்கம் மற்றும் சரஸ்வதி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் வசந்தகுமார் (Serendip be the change foundation-Senior Programme Officer, Jaffna, Former UNICEF, UNHCR GTZ Plan International senior Field Officer, Delft Piradeshiy Sabha Development Officer), ரவிக்குமார், சிறிசாந்தகுமார் (Spain) ஜெயக்குமார் (Norwich-UK), ரஜீவ்குமாரி (சசி-சிற்றுண்டிச்சாலை நடத்துநர், சண்டிலிப்பாய்-பிரதேச செயலகம்), யசோதினி (Norwich-UK), ஆகியோரின் பாசமிகு தாயாரும் வலன்ரைன் (Norwich-UK) ரூபன் (Malaysia), றொசானி (Development Officer-DS Office-Sandilipay), துளசிகா, கிரிஜா (Spain), துசியந்தி (Norwich-UK), ஆகியோரின் அன்பு மாமியாரும் கனொக்ஸ்மரினோ (St.Patricks College), அனாஒபிரின் (j/Ilavalai Convent M.V), அனன்சியாமெர்லலின் (j/Ilavalai Convent M.V) திவிசன் (J/Kokuvil Hindu Primary School), ஆதிசன் (Kokuvil Pre School), கிஷானி(Spain), பிரஜித் (Spain), சஞ்ஜித (Spain), சஸ்மிகா (Norwich-UK), ரமோதயன் (J/Mahajana College Thellipalai), சமீனா (J/Mahajana College Thellipalai), ஏனோசியன் (J/Alaveddy Seenankaladdy Gnanodaya Vidyalayam), யமிசன் (Norwich-UK), ரவோன் (Norwich-UK), ஜோஜினா (Norwich-UK), ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.03.2025) செவ்வாய்க்கிழமை காலை 07.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 09.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும்

இல.1010/17, கே.கே.எஸ் வீதி,
(கண்ணன் இசைக்குழு ஒழுங்கை),
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்
வசந்தகுமார், ரவிக்குமார் (சசி)
077 238 8083, 077 411 8881,
075 148 0512

## மரண அறிவித்தல்



### சின்னத்தம்பி குமாரசுவாமி

(ஓய்வு பெற்ற சுகாதார பரிசோதகர் மலேரியா தடுப்புப்பிரிவு)

யாழ். கரம்பன் மேற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, யாழ்ப்பாணம் சரவணை ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி குமாரசுவாமி அவர்கள் கடந்த 01.03.2025 சனிக்கிழமை காலமானர்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-சிவக்கொழுந்து தம்பதியின் அன்பு மகனும் காலஞ்சென்ற சரஸ்வதி அவர்களின் பாசமிகு கணவரும் தயானந்தன், சதானந்தன் குகநேசன் காலஞ்சென்ற சர்வானந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், முல்லை, சியாமளாதேவி, திலகதிவானி ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான தவநாயகம், சாந்தலிங்கம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், தஷ்யன், ஜயன், சஜன், சசிகாந், பங்கஜன் ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.03.2025) செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணியளவில் சின்னமடு மாதா கோயிலுக்கு அருகாமையில் சரவணை மேற்கு வேலணையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 10.30 மணியளவில் தகனத்திற்காக சரவணை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 151 7552, 021 221 9160

(CS 29908) V-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



தோற்றம் 19 . 03 . 1939

மறைவு 28 . 02 . 2025

**கணபதிஐயர் அன்னபூரணிஅம்மா (பாப்பா அம்மா)**

திருநெல்வேலி தலங்காவற்பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தலங்காவற் பிள்ளையார் கோவில் ஆதீனகர்த்தாவான ஷண்முகரத்தினக் குருக்கள் கணபதி ஐயர் அவர்களின் அன்பு மனைவியான அன்னபூரணிஅம்மா (பாப்பா அம்மா) அவர்கள் கடந்த 28.02.2025 வெள்ளிக்கிழமை தலங்காவற்பிள்ளையாரின் பாதாரவிந்தங்களை சரணடைந்துவிட்டார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்றுமுன்தினம் (01.03.2025) சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றன.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**கனகசபாபதி ஐயர் விக்னராஜசர்மா (மகன்)**
**077 967 2152**

(CS 29912) V-1

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 26 . 09 . 1951

மறைவு 13 . 02 . 2024

கடந்த 13.02.2024 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

### அமரர் சபாரத்தினம் நடராசா

(உரிமையாளர்-ராஜன் ஆபரண மாளிகை, சாவகச்சேரி)

**திதி: மாசிமாத வளர்பிறை சதுர்த்தி**

அன்பாலும் பண்பாலும் எம்மை அரவணைத்து
நல்வழிப்படுத்திய எங்கள் குடும்பத் தலைவரே....
ஆண்டு ஒன்று கடந்தாலும் ஆறவில்லை தெய்வமே!
உங்கள் பிரிவுத்துயரம், உங்கள் நினைவலைகள்
இன்னும் எம் மனதில் பசுமையாகவுள்ளது...
எமது வளமான வாழ்விற்கு வழிகாட்டிய
உங்கள் நினைவுகளுடன்
தங்களின் ஆத்ம சாந்திக்கா பிரார்த்திக்கின்றோம்.
**ஓம் சாந்தி... சாந்தி... சாந்தி...**

கண்டி வீதி, சங்கத்தானை,
சாவகச்சேரி.

**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்



தோற்றம் 11 . 03 . 1944

மறைவு 01 . 03 . 2025

**கனகலிங்கம் நீலாம்பிகை**

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், 69, சங்கிலியன் வீதி நல்லூர், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கனகலிங்கம் நீலாம்பிகை அவர்கள் நேற்று முன்தினம் (01.03.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-பொன்னம்மா தம்பதியின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-பொன்னம்மா தம்பதியின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற கனகலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் கலாறஜினி (அதிபர்-மு/பனிக்கன் குளம் ஆரம்பப் பாடசாலை), கருணாநிதி (பிரான்ஸ்), கபிலானந்தன் (கனடா), நிலாகரன் (ஜேர்மன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கபிலன், றெபேக்கா, விகிதா, அமுதா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் குணபூவதி, காலஞ்சென்றவர்களான இரத்தினம், சிற்றம்பலம், நாகபூசணி, கிருஷ்ணபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் மகாலிங்கம், சண்முகலிங்கம், காலஞ்சென்ற சுந்தரலிங்கம், மற்றும் நாகேஸ்வரி, காலஞ்சென்ற மகாதேவன், மற்றும் சற்குணநாதன், காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் சொரூபராணி, காலஞ்சென்ற கோபாலபிள்ளை மற்றும் துரைராஜா, வேணி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் பிரபன், பிரணவி, கஜனி, யூமேஸ், மார்த்தா, சாஜனா, சாருகாஸ், அஸ்வின், அபிசா, அக்சரன், அஸ்விதா, ஆத்விகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் யாழப்பாணம் நல்லூரிலுள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது இறுதிக்கிரியைகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறியத்தரப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



**மகேஸ்வரன் வாணி (சோதி)**

21A, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மகேஸ்வரன் வாணி (சோதி) அவர்கள் நேற்று (02.03.2025) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபாபதி-அம்பிகை தம்பதியின் அன்பு மகளும் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை-றோசம்மா தம்பதியின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற மகேஸ்வரனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிறிதரன் (அருள்), சிறிகரன் (பரன்), தமிழ்செல்வி (சாந்தி), ஆகியோரின் சகோதரியும் பிரசன்னா, பிரதீப் ஆகியோரின் பாசமிகு தாயாரும் காந்தலோசினியின் அன்பு மாமியாரும் பவிசாந், பவிஸ்ணவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.03.2025) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

21A, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

**தகவல்:**
**மகன்**
**077 161 1943**
**077 714 6590**

(CS 8888) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 125 கிலோ...

வீடொன்றில் பதுக்கப்பட்டிருந்த கஞ்சாவைக் கைப்பற்றியதுடன், சந்தேகநபரைக் கைது செய்த விசேட அதிரடிப் படையினர், சந்தேகநபரை சான்றுப் பொருளுடன் இளவாலைப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை இளவாலைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-எ-26)

## செம்மணிப்...

படக்கூடும். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

செம்மணிப் புதைகுழி வழக்கில் 600க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்பதே பிரதான குற்றச்சாட்டாகும். அந்த உடல்கள் செம்மணியில் புதைக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் கடந்தகாலங்களில் அங்கு அகழ்வுகள் நடத்தப்பட்டிருந்தன. வடக்கு, கிழக்கில் கொக்குத்தொடுவாய் மற்றும் மன்னார் பாலத்துக்கு அருகில் உள்ள சதோச கட்டடத் தொகுதியில் மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தற்போது செம்மணியில் மனித எலும்பு எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இங்கே புதைகுழிகள் தொடர்பில் எந்த நெறிமுறையும் கடைப்பிடிக்கப்படுவதில்லை. என் அறிவுக்கு எட்டியவரை தெளிவான நெறிமுறை பின்பற்றப்படவதில்லை. இதற்கு நிதிப் பற்றாக்குறை காரணம் காட்டப்படுகிறது. இந்த விடயங்களை தீவிரமாகக் கவனிக்க வேண்டும். மன்னார், கொக்குத்தொடுவாய் ஆகிய இரண்டு இடங்களிலும் இழுபறி நிலையே காணப்படுகிறது. அதனாலேயே யாழ்ப்பாணத்தில் செம்மணியிலும் ஆதாரங்கள் சிதைக்கப்பட்டு அழிக்கப்படலாம் என்று அஞ்சுகின்றோம் - என்றார். (அ-எ-66)

## மணல்...

பொலிஸார் வழிமறித்துள்ளனர். பொலிஸாரின் கட்டளையை மீறி டிப்பர் பயணித்த நிலையிலேயே, டிப்பர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்போது, ஒருவர் காயமடைந்துள்ளார். அவர் கைதுசெய்யப்பட்டுப் பொலிஸ் பாதுகாப்புடன் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

டிப்பரில் இருந்து மற்றைய ஒருவர் தப்பியோடியுள்ளார். அவரைக் கைதுசெய்யும் நடவடிக்கைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-26-27-66-100)

## ஜப்பான்...

வுள்ளார். இந்தப் பயணத்தில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் அதிகாரிகள் பங்கேற்கவுள்ளனர்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் ஜப்பான் பயணத்துக்கான திகதி இந்தவாரம் தீர்மானிக்கப்படும் என்றும், அதன்பின்னர் ஐரோப்பாவுக்கான பயணத்தில் ஜனாதிபதி பங்கேற்கவுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, வெளியுறவுத் துறைக்கான ஜப்பான் நாடாளுமன்றத் துணை அமைச்சர் இகுய்னா அகிகோவை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இந்தச் சந்திப்பு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 58ஆவது அமர்வின் பக்க நிகழ்வாக நடந்துள்ளது. இந்தச் சந்திப்பில் ஜனாதிபதியின் ஜப்பான் பயணம் தொடர்பாகவும் பேசப்பட்டுள்ளது.

சுதந்திரமான மற்றும் திறந்த இந்தோ - பசுபிக் இலக்கை அடைவதில் ஜப்பானுக்கு ஒரு முக்கியமான பங்காளியாக இலங்கை உள்ளது என்றும், பிராந்தியம் முழுவதும் ஸ்திரத்தன்மை மற்றும் செழிப்பை அடைய இலங்கையுடன் தொடர்ந்து இணைந்து பணியாற்ற ஜப்பான் விரும்புகின்றது என்றும் ஜப்பான் வெளியுறவுத் துறைக்கான நாடாளுமன்ற துணை அமைச்சர் இகுய்னா அகிகோ இந்தச் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

இலங்கை மக்களைக் கருத்திற்கொண்டு ஜப்பான் தொடர்ந்து ஒத்துழைப்பை வழங்கும் என்றும், நிறுத்தப்பட்ட பல திட்டங்களை மீண்டும் இலங்கையில் ஆரம்பிக்க உள்ளோம், இலங்கை சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்புக்கொண்ட சீர்திருத்தங்கள் நிலையான முறையில் செயற்படுத்தப்படுவதையும், முழுமையான பொருளாதார வளர்ச்சிக்கான பாதையில்நிலையான முன்னேற்றத்தையும் ஜப்பான் ஆவலுடன் எதிர்நோக்குகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சந்திப்பில் கருத்துத் தெரிவித்த வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், ஜப்பான் இலங்கைக்கு நீண்டகாலமாக அளித்து வரும் ஆதரவுக்கும், அரசியல், பொருளாதாரம் மற்றும் மக்களிடையேயான பரிமாற்றங்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் ஒத்துழைப்புகளுக்கும் நன்றி தெரிவித்துள்ளார். (அ-எ-இ)

## வெளிநாட்டு...

தின் பிரதான சந்தேகநபர் உட்பட இருவர் நேற்று நள்ளிரவு கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தக் கும்பல் ரிக்ரொக் சமூக வலைத்தளத்தின் ஊடாகவே இந்த மோசடிகளை மேற்கொண்டமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த மாதம் நடந்திருந்தது. வெளிநாடு செல்வதற்காக இளைஞர் ஒருவர் முகவர் ஒருவரைத் தொடர்புகொண்டபோது, 80 லட்சம் ரூபா பணத்தை வங்கியில் வைப்பிலிட்டு வங்கி அறிக்கையைக் கொண்டு நேரடியாக வந்து சந்திக்க வேண்டும் என்று அந்த முகவர் தெரிவித்துள்ளார். அதை நம்பிய இளைஞர் வங்கிக் கணக்கில் பணத்தை வைப்பிலிட்டுவிட்டு வங்கி அறிக்கையுடன் யாழ்ப்பாணம் நகரப் பகுதிக்கு முகவரைச் சந்திப்பதற்கு வந்துள்ளார்.

அப்போது ஆரியகுளம் பகுதியில் இளைஞன் நின்றபோது கார் ஒன்றில் வந்த கும்பல் இளைஞரைக் கடத்திச் சென்றுள்ளது. இளைஞரை மிரட்டிய அந்தக் கும்பல் வங்கிக் கணக்கில் இருந்த 80 லட்சம் ரூபா பணத்தை வேறொரு வங்கிக் கணக்குக்கு மாற்றிவிட்டு இளைஞரைக் கோப்பாய் பகுதியில் இறக்கிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட யாழ்ப்பாணம் குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸார், பெண் உட்பட நால்வரைக் கைது செய்தனர். அதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட தொடர் விசாரணைகளின் அடிப்படையில் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மற்றுமொரு சந்தேகநபர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் இந்தக் கடத்தல் சம்பவத்தின் பிரதான சந்தேகநபர் உட்பட இருவர் நேற்று நள்ளிரவு யாழ்ப்பாணம் குற்ற விசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி கலும் பண்டார தலைமையிலான பொலிஸ் குழுவால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் பல விடயங்கள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன. இந்த மோசடியின் மற்றுமொரு பிரதான சூத்திரதாரி சுவிட்ஸர்லாந்தில் உள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. ரிக்ரொக் சமூக வலைத்தளம் ஊடாகவே அவர்கள் இளைஞர்களை இலக்கு வைத்துள்ளனர். ரிக்ரொக்கில் வெளிநாடு அனுப்புவதாகக் கூறி இவர்கள் பதிவேற்றும் விளம்பரங்களைப் பார்த்துத் தொடர்புகொள்ளும் இளைஞர்களை இவர்கள் வகைப்படுத்தியுள்ளனர். வெளிநாடு செல்வதற்கு பண வசதி இல்லாதவர்களைத் தெரிந்தெடுத்து அவர்களை வேலைவாய்ப்பு விசாவில் வெளிநாடு அனுப்புகின்றோம், அதற்குரிய பணத்தை வங்கியில் வைப்பிலிட்டுக் காட்டுகின்றோம் என்று கூறி அவர்களின் வங்கிக் கணக்கிலக்கங்களைப் பெற்றுக்கொள்கின்றனர். இவ்வாறு 50க்கும் மேற்பட்டவர்களிடம் வங்கிக் கணக்கிலக்கங்களைப் பெற்றுக்கொண்டுள்ளனர் என்று தெரியவருகின்றது. அதேநேரம் வெளிநாடு செல்வதற்குப் பணத்துடன் உள்ளவர்களை இனங்கண்டு அவர்களை வங்கிக் கணக்கில் பணத்தை வைப்பிலிட்டுக் காட்டுமாறு கூறுகின்றனர். அவர்கள் வைப்பிலிட்டதும் அவர்களைக் கடத்தி மிரட்டி அவர்களின் வங்கிக் கணக்கில் உள்ள பணத்தை, தாங்கள் ஏற்கனவே பெற்று வைத்திருக்கும் இளைஞர்களின் வங்கிக் கணக்குகளுக்கு மாற்றியுள்ளனர். அதன்பின்னர் சங்கிலித் தொடராகப் பல வங்கிக் கணக்குகளுக்கு மாற்றி இறுதியில் அந்தப் பணத்தை மோசடியாளர்கள் தங்களுக்கு மாற்றிக்கொண்டுள்ளனர் என்பது விசாரணைகளில் தெரியவந்திருக்கின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், இவ்வாறு ரிக்ரொக் சமூக வலைத்தளத்தில் வெளியாகும் விளம்பரங்களின் ஊடாக யாரேனும் வெளிநாடு அனுப்புவதாகக் கூறி மோசடி செய்யப்பட்டிருந்தால் தொடர்பு கொண்டு தகவல்களை வழங்கவேண்டும் என்று யாழ்ப்பாணம் குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸார் அறிவித்துள்ளனர். (அ-எ-26)

## எரிபொருள்...

வித்துள்ளார். எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தற்போதுள்ள எரிபொருள் இருப்பு இன்று திங்கட்கிழமை காலை வரை மட்டுமே போதுமானது என்று எரிபொருள் விநியோகத்தர்கள் தெரிவித்திருந்த நிலையில், அதை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மறுத்துள்ளது.

இது தொடர்பில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவித்துள்ளதாவது:-

நாடு முழுவதும் இன்று (நேற்று) ஆயிரத்து 581 முன்பதிவுகளை பெற்றுள்ளோம். இன்று (நேற்று) ஞாயிற்றுக்கிழமை என்ற போதிலும் எரிபொருள் விநியோகிக்கப்படுகிறது. எனவே எரிபொருள் பற்றாக்குறை நிலவாது. ஓகஸ்ட் மாதம் இறுதி வரை எரிபொருளுக்கான முன்பதிவுகளைச் செய்துள்ளோம். நாட்டில் எரிபொருளுக்கு பற்றாக்குறை நிலவ வேண்டுமானால் அதன் இருப்பு முடிய வேண்டும் அல்லது எரிபொருளை முன்பதிவு செய்வதற்கான நிதிப் பிரச்சினை இருக்க வேண்டும். இந்தச் சிக்கல்கள் எதுவும் தற்போது இல்லை - என்றார். (அ-எ-இ)

## வல்லைப்...

செயற்திட்டத்தால் வெளியிடப்பட்ட இந்த அறிக்கையை இந்திய இராணுவத்தால் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளில் பாதிக்கப்பட்ட பொது மக்கள் வெளியிட்டனர்.

வடமராட்சி ஊடக இல்லத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (அ-எ-27-100)

## இலங்கை...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை இலங்கை தொடர்பான தனது கடைசி அறிக்கையில், இலங்கையில் பொறுப்புக்கூறலை மேம்படுத்துவதற்கு சர்வதேச சட்ட உதவிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்திருந்தது. ஆனால் இலங்கை அதை நிராகரித்திருந்தது.

இலங்கையில் இறுதிப்போரில் நடந்ததாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பில் வெளியகப் பொறிமுறை மூலம் தகவல்களைத் திரட்டுவதற்கு இலங்கை அரசாங்கம் எதிர்ப்புத் தெரிவித்துள்ள நிலையில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் தனது வாய்மூல அறிக்கையில் குறிப்பிடப்படவுள்ள விவரங்களும், அவற்றுக்கு இலங்கை அளிக்கவுள்ள பதிலும் முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன.

கடந்த வெள்ளிக்கிழமை ஜெனிவாவில் மனித உரிமைகள் பேரவை அமர்வில் கருத்துத் தெரிவித்திருந்த இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், நம்பகமான உள்ளகப் பொறிமுறை மூலம் விசாரணைகளை மேற்கொள்ள இலங்கை திட்டமிட்டுள்ளது என்று குறிப்பிட்டிருந்தார்.

இறைமையுள்ள எந்த நாடும் வெளியகப் பொறிமுறையை ஏற்றுக்கொள்ளாது என்று தெரிவித்திருந்த அவர், வெளியகப் பொறிமுறையை வலியுறுத்துவது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணைக்கு முரணானது என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இந்தப் பின்னணியில் இன்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் தனது வாய்மூல அறிக்கையைச் சமர்ப்பிக்கவுள்ளார். (அ-எ-6)

## போதை...

தப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கொக்குவில் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜெயந்த குணதிலகவின் வழிகாட்டலில் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (அ-எ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதீட்டில் சமூகநலனைவிட பாதுகாப்புக்கே முன்னுரிமை

## கஜேந்திரகுமார் எம்.பி. சுட்டிக்காட்டு

**கொழும்பு, மார்ச் 2**

**அரசாங்கத்தின் வரவு - செலவுத்திட்டத்தில் சமூகநலனைவிட பாதுகாப்புக்கே முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்புக்காக 434 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, இது முந்தைய ஆண்டை விட 3 வீதம் அதிகமாகும். மேலும் பொதுப்பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்களுக்காக மேலும் 175 ரூபா பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் பாதுகாப்பு விடயத்துக்கு முன்னுரிமை அளித்துள்ளமையானது பாதுகாப்புப் படைகளை அதிகரிக்க விரும்புகிறது என்பதையே காட்டுகிறது என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

16 வருடங்களுக்கு முன்னர் யுத்தம் முடிவுக்கு வந்தது. இன்று போரில்லாத போதும்கூட அந்தத் துறையை மேம்படுத்தும் எண்ணம் உள்ளது.

இந்த வரவு - செலவுத்திட்டத்தில் சமூகநலனைவிட பாதுகாப்புக்கே முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளமை தெளிவாகிறது.

இலங்கையின் அமைவிடம் காரணமாக, போதைப்பொருள் மற்றும் தீவில் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் காரணமாக பாதுகாப்புத் துறையை வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தைப் பற்றிப் பேசுகின்றனர்.

அந்த வாதத்தை முகத்தோற்ற அளவில் எடுத்துக்கொண்டால் முழுத் தீவும் பாதுகாப்பாக இருப்பதை உறுதிசெய்வதற்காகவும் முழுத்தீவையும் வலுப்படுத்துவதற்காகவுமே அக்கருத்துகள் அமைந்திருந்தன. ஆனால் நான் இப்போது ஆதாரமாக கணக்கொன்றைப் பதிவுசெய்கிறேன். ஒவ்வொரு 100 குடிமக்களுக்கும் 1.5 சிப்பாய்கள் என்ற விகிதத்தில் உள்ளது. அதுவே இலங்கையின் பாதுகாப்புக் கட்டமைப்பின் விகிதமாகும். 100:1.5 ஆகும் உங்கள் முழு இராணுவத்தையும் நீங்கள் வைத்திருக்கும் பிராந்தியங்களின் மக்கள்தொகை என்ன?

அது தமிழ் பேசும் பகுதி. அது நாங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் பகுதிகள். இதன் மூலம் நீங்கள் சொல்லும் செய்தி என்ன? எதிரி யார்? யாரை நீங்கள் எதிரியாகக் கருதுகிறீர்கள்?

முல்லைத்தீவு மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் இரண்டு பொதுமகனுக்கு ஒரு சிப்பாயாக (2:1) உள்ளது. இராணுவத்தில் 20 பிரிவுகள் உள்ளன. அவற்றில் 16 பிரிவுகள் வடக்கு - கிழக்கில் முகாமிட்டுள்ளன.

முந்தைய அரசாங்கங்களும் இதைத்தான் செய்தன. அவர்கள் அனைவரும் இனவாதிகள் என்பதை இந்த அரசாங்கமே ஒப்புக்கொண்டது. ஆனால் இன்று அதே கொள்கையையே இந்த அரசாங்கமும் பின்பற்றுகிறது. இனவாதத்தை ஒழிப்போம் என்றுகூறி ஆட்சிக்கு வந்தீர்கள். முல்லைத்தீவு என்ற இடத்தில் 2:1 என்ற விகிதத்தை எப்படி நியாயப்படுத்தப் போகிறீர்கள்? என்று நான் உங்களிடம் கேட்கிறேன். உங்களால் ஒருபோதும் நியாயப்படுத்தமுடியாது.

எனவே நீங்கள் அதை மாற்றவேண்டும், அதை மாற்றாமல் இனவாதத்தை ஒழிப்பீர்கள் என்று வெறுமனே எங்களிடம் நீங்கள் கூறுவது வெறுக்கத்தக்கது. நீங்கள் சொல்வதில் அர்த்தமில்லை. - என்றார். (ச-66, 125 ,27)

# யோகக்கலை கற்கைநெறி

யாழ்ப்பாணம், மார்ச்.3

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் உடல், உள மேம்பாட்டிற்காக இலவசமாக நடத்தப்பட்டுவருகின்ற யோகக்கலை அடிப்படை கற்கைநெறியின் புதிய பிரிவு நல்லூர்க் கந்தன் ஆலய பின்வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 6 மணிமுதல் காலை 8 மணிவரை நடைபெறும்.

ஆர்வமுள்ள ஆண்கள், பெண்கள் இருபாலாரும் வயது வேறுபாடின்றி கலந்துகொள்ள முடியும்.

சுமார் மூன்று மாத காலங்களைக் கொண்டமைந்த இந்த அடிப்படைக் கற்கைநெறியைப் பூரணமாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளது.

பயிலவிரும்புவோர் நேரடியாக வந்து பதிவுகளை மேற்கொண்டு வகுப்பில் இணைந்து கொள்ளுமாறும் மேலதிக தகவல்களை 021 222 2203 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (ச-125)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

யாழ்ப்பாணம், மார்ச்.3

வட்டுக்கோட்டை மூளாய் ஐக்கிய நாணய சங்கத்தின் 92 ஆவது வருடாந்த பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெற்றது.

இதில் இடம்பெற்ற நிர்வாகத் தெரிவில் தலைவராக த. நாராயணன், செயலாளராக ப. அருள்ராசன், பொருளாளராக வெ. சிவசுப்பிரமணியம், உறுப்பினராக ரி. கனகசபாபதி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ச-இ)

# பண்டிதர் ஈஸ்வரநாதபிள்ளை நேற்றுக் காலமானார்



யாழ்ப்பாணம், மார்ச் 3

ஈழத்து மரபுவழி அறிஞர்களுக்குள் பெயர் குறிப்பிட்டுக் கூறக் கூடிய பண்டிதர் க. ஈஸ்வரநாதபிள்ளை நேற்றுக் காலமானார்.

நாரந்தனையில் 1937ஆம் ஆண்டு பிறந்த இவர், சைவ இலக்கியங்கள், தத்துவங்களில் ஆழ்ந்த புலமையுடையவர். இவர் பலபக்தி இலக்கியங்களைப் படைத்துள்ளார். அவை சிறு நூல்களாகப் பதிப்பிடப்பட்டுள்ளன.

தமிழ், ஆங்கிலம் இரு மொழிகளிலும் புலமை கொண்ட இவர், இவ்விரு மொழிகளிலும் தனக்கென மாணவப் பரம்பரையைக் கொண்டவராவார். இவர் யாழ். பல்கலைக் கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் ஈ. குமரனின் தந்தை என்பது குறிப்பிடத்தக்கது. (எ-இ)

# இலட்சார்ச்சனை

வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய மாசிமக இலட்சார்சனைப் பெருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகியது.

தொடர்ந்து பத்துத்தினங்கள் ஆலய இலட்சார்ச்சனை உற்சவத்தில் தினமும் முற்பகல் 10மணிக்கும் மாலை 4மணியளவிலும் இலட்சார்ச்சனை இடம்பெறும்.

எதிர்வரும் 12ஆம் திகதி புதன்கிழமை மாசிமக நன்னாளில் முற்பகல் 10மணியளவில் பொன்னாலைத் திருவடிநிலை தீர்த்தக் கடற்கரையில் இலட்சார்ச்சனை தீர்த்தோற்சவமும், அன்றைய தினம் மாலை 4.30மணியளவில் தீபபூஜை உற்சவமும் நடைபெறுமென ஆலயப் பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ச-41-66)

# கௌரவிப்பு விழா

யாழ்ப்பாணம், மார்ச்.3

யாழ். மாவட்ட பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் சங்கம் தமது உறுப்பினர்களாக 25 வருட சேவையைப் பூர்த்தி செய்தவர்களையும் ஓய்வுபெற்ற உறுப்பினர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை காலை 10மணிக்குச் சமாசக் கூட்டுறவாளர் மண்டபத்தில் சங்கத் தலைவர் லீ. நிர்மலன் தலைமையில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கி. சந்திரசேகரன் கலந்துகொள்ளவுள்ளார். (ச-41-63)

### எரிபொருள் தள்ளுபடி நீக்கம்

# முடிவில் அரசாங்கம் இறுக்கம் விநியோகஸ்தர்கள் எச்சரிக்கை

தொழில்துறை பங்குதாரர்களின் தொடர்ச்சியான எதிர்ப்புகள் இருந்தபோதும், எரிபொருள் விநியோகஸ்தர்களுக்கு வழங்கப்படும் கூடுதல் தள்ளுபடியை நீக்குவது தொடர்பான தனது நிலைப்பாட்டை அரசாங்கம் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

அதிகப்படியான கட்டணங்களை அகற்றுவதை நோக்கமாகக் கொண்ட இந்த முடிவை மாற்ற முடியாது என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். நிலைமை இன்று (நேற்று) காலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது என்றும், விநியோகஸ்தர்கள் நியாயமான தள்ளுபடி தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தலாம் என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, அரசாங்கம் தனது முடிவை மறுபரிசீலனை செய்யாவிட்டால் சாத்தியமான செயல்பாட்டு மாற்றங்கள் தொடர்பாக பெற்றோலிய விநியோகஸ்தர் சங்கம் எச்சரித்துள்ளது. விநியோகஸ்தர்கள் வங்கி அட்டை மற்றும் வங்கி கடன் அட்டை கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்வதை நிறுத்துதல், ஊழியர்களைக் குறைப்பு மற்றும் செலவுகளைக் குறைக்க எரிபொருள் நிலையங்களை முன்கூட்டியே மூடல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ளும் என்று சங்கம் தெரிவித்துள்ளது. (எ-இ)

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

கொக்குவில் மேற்குப் பகுதியில் வீட்டுடன் 6 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 891 3745
021 222 3153

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.03.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.